**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – வடகிழக்கு பருவமழை – மிக்ஜாம் புயல் – சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியான 2,68,869 குடும்பங்களுக்கு தலா ரூ.6,000/– நிவாரணம் வழங்குதல் – ரூ.39,51,21,000/–ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2**

**அரசாணை (நிலை) எண்.48** **நாள்:14.02.2024**
**சோபகிருது வருடம், மாசி–2**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.12.2023.
2. அரசாணை (நிலை) எண்.584, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 12.12.2023.
3. அரசாணை (நிலை) எண்.587, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பே.மே.2) துறை, நாள் 15.12.2023.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கடித எண்.இ.இ.1(2)/ 1553/ 2023, நாள் 02.02.2024 மற்றும் 06.02.2024.

•••••

**ஆணை:–**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: –

i) தமிழ்நாட்டில் 03.12.2023 மற்றும் 04.12.2023 அன்று ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 24,25,336 குடும்பங்களுக்கு தலா ரூ.6,000/– வீதம் நிவாரணம் வழங்கிட மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.1486,93,74,000/– நிதி ஒதுக்கீடு செய்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா....

| வ. எண் | மாவட்டம் | மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | நிவாரணம் பெற தகுதியான குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | விண்ணப்பம் பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 17,28,739 | 13,72,509 | 3,56,230 |
| 2 | திருவள்ளூர் | 6,65,596 | 6,08,726 | 56,870 |
| 3 | செங்கல்பட்டு | 4,08,572 | 3,12,952 | 95,620 |
| 4 | காஞ்சிபுரம் | 1,51,362 | 1,31,149 | 20,213 |
| | **மொத்தம்** | **29,54,269** | **24,25,336** | **5,28,933** |

ii) இதனைத் தொடர்ந்து, மேற்படி நிவாரணத் தொகையான ரூ.1486,93,74,000/- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டது. இந்நிதியினை, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக பெறப்பட்ட பட்டியல்களின் படி, மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/- வீதம் ரூ.1455,20,16,000/- நிவாரண தொகையினை நியாயவிலை கடை மூலம் ரொக்கமாக வழங்கவும், மேலும் நிவாரணம் கோரி பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியான குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/- வீதம், (உத்தேசமாக விண்ணப்பம் பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையில் 10 சதவிகித குடும்பங்களுக்கு) நிவாரணத் தொகையினை நேரடியாக வங்கி கணக்கில் வரவு வைக்குமாறும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

iii) தற்போது, திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ரூ.6000/- நிவாரணம் கோரி 7,03,172 விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், அவற்றுள் 2,68,869 விண்ணப்பங்கள் தகுதியானவை எனவும், தகுதியான குடும்பங்களுக்கு தலா ரூ.6,000/- வழங்க ஏதுவாக ரூ.161,32,14,000/- நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளனர்.

iv) இந்நேர்வில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.1486,93,74,000/-இல் நிவாரணம் வழங்கியது போக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வங்கிக் கணக்கில் ரூ.96,00,92,000/- மீள்வரவு வைக்கப்பட்டு செலவினமாகாத மீதத் தொகையாக உள்ளது என நிருவாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தெரிவித்துள்ளார்.

v) தென் மாவட்டங்களில் பெய்த அதிகனமழை மற்றும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.541,37,24,000/-இல் நிவாரணம் வழங்கியது போக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வங்கிக் கணக்கில் ரூ.25,80,01,000/- மீள்வரவு வைக்கப்பட்டு செலவினமாகாத மீதத் தொகையாக உள்ளது என

நிருவாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தெரிவித்துள்ளார்.

vi) எனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் மிக்ஜாம் மற்றும் தென் மாவட்ட வெள்ளப் பெருக்கு நிவாரண நிதி வழங்கியது போக, மீதம் ரூ.121,80,93,000/- (96,00,92,000 + 25,80,01,000) தொகை உள்ளது.

vii) தற்போது, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் ஆட்சியர்களின் அறிக்கைகளின் அடிப்படையில், மிக்ஜாம் புயலால் வாழ்வாதார இழப்பு இல்லாத விண்ணப்பங்கள் நீங்கலாக, இதர ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு ரூ.6000/- வீதம் நிதி ஒதுக்கீடு செய்ய பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | மாவட்டம் | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | கோரப்படும் நிவாரணத் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 87,310 | 36,861 | 22,11,66,000 |
| 2 | சென்னை | 4,62,774 | 2,02,847 | 121,70,82,000 |
| 3 | காஞ்சிபுரம் | 31,368 | 12,257 | 7,35,42,000 |
| 4 | செங்கல்பட்டு | 1,21,720 | 16,904 | 10,14,24,000 |
| | **மொத்தம்** | **7,03,172** | **2,68,869** | **161,32,14,000** |

2. இந்நிலையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட தகுதியான **2,68,869** விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 6000/- வீதம் நிவாரணத் தொகை வழங்க மாவட்ட ஆட்சியர்களால் கோரப்பட்ட தொகை ரூ.161,32,14,000/-இல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வங்கிக் கணக்கில் மீள்வரவு வைக்கப்பட்ட செலவினமாகாத மீதமுள்ள தொகையான ரூ.121,80,93,000/- போக மீதம் ரூ.39,51,21,000/-ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், நிவாரணத் தொகையினை தகுதியான குடும்பங்களின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கவும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில், மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

i) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.6000/- நிவாரணம் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியான 2,68,869 குடும்பங்களுக்கு தலா ரூ.6,000/- வழங்க ரூ.161,32,14,000/- (ரூபாய் நூற்று அறுபத்து ஒன்று கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து பதினான்கு ஆயிரம் மட்டும்) தேவைப்படும். மேற்படி தொகையினை வழங்கிடும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வங்கிக் கணக்கில் மீள்வரவு வைக்கப்பட்ட செலவினமாகாத மீதமுள்ள

த.பி.பா....

தொகையான ரூ.121,80,93,000/- (ரூபாய் நூற்று இருபத்து ஒன்று கோடியே எண்பது இலட்சத்து தொண்ணூற்று மூன்று ஆயிரம் மட்டும்) போக மீதம் ரூ.39,51,21,000/-ஐ (ரூபாய் முப்பத்தொன்பது கோடியே ஐம்பத்தி ஒன்று இலட்சத்து இருபத்து ஒன்று ஆயிரம் மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது;

ii) மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 2,68,869 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6000/- வீதம் நிவாரணத் தொகையானது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் பயனாளர்களுக்கு நேரடியாக வங்கி கணக்கில் (DBT) செலுத்தப்படும்.

4. மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு, உரிய மேல் நடவடிக்கை எடுக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2245 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு - 02 - வெள்ளம், புயல் முதலியவை - 101 - கருணை உதவி - மாநிலச் செலவினங்கள் - AE - வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவித் தொகை அளித்தல் - 356 - உணவளித்தல் ரொக்கத் தொகை - 01- உணவளித்தல் ரொக்கத்தொகை.

[IFHRMS த.தொ.கு.2245 02 101 AE 35601]".

6. மேலே பத்தி-3 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.39,51,21,000/-, 2023-2024-ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்/வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.எண்.6459286/ நிதி (வருவாய்)/2024, நாள் 14.02.2024-ல் பெறப்பட்ட இசைவுடன், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 1936 (ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஆறு) உடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No.2024021936)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்
மற்றும் மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை-5.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-600 009.
இயக்குநர், (பேரிடர் மேலாண்மை),
தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை-600 005.
ஆணையர், உணவுப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
12, தம்புசாமி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை -600010.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
என்.வி.நடராஜன் மாளிகை, கீழ்ப்பாக்கம், சென்னை -600010.
மாவட்ட ஆட்சியர்கள்,
சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம்.
கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை-600 008.
மாவட்ட கருவூல அலுவலர்கள்,
திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம்.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018.

**நகல்**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நீர்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

த.பி.பா....

அரசு முதன்மைச் செயலாளர், உள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர், பொதுப் பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளரின்
தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி/(வருவாய்/வ.செ.பொ.1/வ.செ.பொ.2/வ.வ.I)த்துறை,
சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

14/2/24

**பிரிவு அலுவலர்**

14/2/2024